உ

# சோழ அரசர் வம்சத்தினராகிய

கள்ள மரபினர்க்கு

சாதி, குலம், பட்டப்பெயர், சிறப்புப்பெயர்

ஏற்பட்டிருக்கும் காரணத்தின் விளக்கமும்,

அம்மரபினர்கட்கோர் வேண்டுகோளும்.

---


தஞ்சை, கள்ளர் மகாசங்கம் பொக்கிஷதாரரும்

காரியதரிசிகளுள் ஒருவருமாகிய,

கூனம்பட்டி

**S. குமாரசாமி மேற்கொண்டாரால்**


எழுதப்பட்டன.

---


தஞ்சை,

ஸ்ரீ சங்கரவிலாச சாரதாமந்திர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.


---


Copy-rights Reserved.



1927.

உ

சிவமயம்.

## துதி

மதிபரிதி யெரிநீர்கால் வானவனியியமானன் வடிவாயெல்லா
வதிபதியா யனைத்துமா யல்லாதவறிவுருவை யகத்துள்வைப்பாம்.

## முன்னுரை.

கள்ள மரபினர் சம்பந்தமாய் நமது வம்சத்தாராகிய திருவாளர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், மு. சாமிநாதமாண்டைராயர் அவர்கள் தமிழிலும் காலஞ்சென்றவரும் லற்றீன்பாஷைத்தேர்ச்சியுடன் பீ. ஏ. பட்டம் பெற்றவரும் நமது தாலுகாவில் டிப்டி தாசில்தாரும், தாசில்தாருமாயிருந்த திருவாளர் A. சிவக்கொழுந்து முதலியார் அவர்கள் ஆங்கிலத்திலும் எழுதியுள்ள சரித்திரங்களை சாமான்ய அறிவுடைய எம்போல்வார்க்கு உள்ளுற வாசிப்பது கடினமெனக்கருதி அவர்களின் அபிப்பிராயத்தைத் தழுவிச் சிற்சில பதங்களின் அருத்தத்தை எனது சிற்றறிவுக் கெட்டிய வரையிலும் நன்கு விளக்கியிருப்பதை அறிவிற்பெரியோர்கள் ஆராய்ந்து அவற்றின்கண் நிகழும் குற்றங்கள் இருப்பின் மன்னித்து விளக்கியும் காட்டுவார்கள் என்னும் துணிபுடன் இந்த வியாசத்தை எழுதலானேன்.

## நூல்.

1. கள்ளர். இக்குலத்தவர்களைக் கள்ளர் என்னும் பதத்துக்கு திருடர் என்பதாய் அருத்தம்கொண்டு திருட்டுச்சாதியார் என்று பலரும் தாற்பரியப்படுவது மிக்கவும் விசனிக்கற்பாலதே! மேற்படிப்பதத்தை உள்ளுற ஆராய்ந்துபார்க்கின் கல்லர் என்ற பதத்தின் திரிபாகக்காணப்படுகிறது, கல், கல்லு என்னும் வினைகளின் அடியாக கல்வி, கல்லல், கற்பு முதலிய தொழிற் பெயர் ஏற்பட்டிருக்கிறது போல கல்லன் என்னும் பதம் மேற்சொன்ன கல்லு என்னும் வினையடியாகப் பிறந்த வினையாலணையும் பெயர் ஆகும். கல் என்னும் வினைக்கு தோண்டு என்று அர்த்தமாகிறது. கல், கல்லு; சொல், சொல்லு, என்னும் வழக்கச்சொற்கள் உண்டு.

கல்வி என்னும் மொழிக்கு படிப்பினால் அஞ்ஞானத்தைக் கல்லுகிறது அல்லது அடியோடு தோண்டுவது என்று பொருள்படும். அதுபோலவே கல்லன் என்னும் பதத்திற்கு தனது பகைவர்களை அடியோடு தோண்டுபவன் அல்லது நாசம்செய்விப்பவன் எனப்பொருள்படும். கல்லன் என்பது கள்ளனாக வழங்கிவருவது இயல்பு வழக்குபற்றியே யாகும். ல், ள் மெய் யெழுத்துகள் இனவெழுத்து ஆகலின் ஒன்றற்கொன்று மாறுதலுற்று வழங்கிவரினும் அருத்தம் சிறிதேனும் மாறுபடற்கு ஏதுவில்லாதிருக்கிறது. உதாரணமாக மெல்ல, மெள்ள எனவும் மல்லர், மள்ளர் எனவும் செல் (பறக்கும் ஒரு சிறு வண்டு) செள் எனவும் சலு, சளு எனவும் பொள்ளாமணி, பொல்லாமணி; பொள்ளாப் பிள்ளையார் பொல்லாப் பிள்ளையார் எனவும் புல்லாங்குழல், புள்ளாங்குழல் எனவும் வழக்கத்தில் நாம். பிரயோகித்து வருவதுண்டு. கள்ளன் என்னும் மொழியோ கள் என்னும் வினையடியாக வந்தபெயர் எனவும் கள் என்னும் பதத்திற்கு, திருடு என்னும் அருத்தமே பேரகராதியிற் கூறப்பட்டு முள்ளது. மேலும் பொள்ளாமணி என்பது துளைபடாதமணி என்று பொருள்பட்டும் அந்தமொழி பொல்லாமணிஎன வழங்கிவருகிறது.

ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகள் திருவாசகத்தில் புணர்ச்சிப் பத்து முதற் செய்யுளிற் கடைசியடியிற் "புடைபட்டிருப்பதென்று கொல்லோவென் பொல்லா மணியைப் புணர்ந்தே" என்று சொல்லியிருக்கிறது மல்லாமல் அந்தப்பதிகம் முழுவதுமே யவ்வாறு கூறியுள்ளார். அவ்விதமே பொள்ளாப்பிள்ளையார் என்னும் பதமும் பொல்லாப்பிள்ளையார் என வழங்கிவருகிறது. இதற்கு இயல்பு வழக்கு என்பதாய் இலக்கணத்திற் கூறியுள்ளது. இது நிற்க, கொல்லன் என்னும் பதத்திற்கு கொல்லும் தொழிலைச் செய்பவன் என்று அருத்தமாயினும் இரும்பைச் சுடக் காய்ச்சி தனக்கு வேண்டியவாறு சம்மட்டியால் அடித்து (கொன்று) கருவிகளைச் செய்பவன் என்று அருத்தம் கொள்கிறோமே தவிரக் கோலையாளி என்று சொல்லுபவர் ஒருவரும் இல்லை. ஆகையால் கள்ள (கல்ல)ச்சாதியாரைத் திருடர் என்று பொருட்

படுத்தி ஏளனமாய்ப் பிறர்கள் நினைப்பது மிக்கவும் தவறாகும்.
மேலும் ஆரியர் என்னும் பதம் பிராமணருக்கும் மிலேச்சருக்கும்
பொருள்பட்டும் எல், எல்லி, என்னும் பதங்கள் சூரியன், இராத்
திரி எனப் பொருள்பட்டும், இந்த இரண்டுபதங்களும் ஒன்றற்
கொன்றெதிர்ப்பதங்களா யருத்தந் தருகின்றன. இதுபோலவே
கள்ளர் என்னும் சாதியாரை திருட்டு சாதி யெனத் தவறாகப்
பொருள் கூறுகிறார்கள். வீரர் என்று பொருள்படக்கூடிய நமது
கள்ள மரபினரைத் திருடர் என்று பொருள்படுத்துவது எவ்வா
றிருக்கிறதென்னில் காராட்டை (கருப்பு ஆடு) வெள்ளாடென
வும் நெட்டையனைக் குள்ளன் என்று அழைப்பதும் சிவந்த நிற
முடையானை கறுப்பன் என்று அழைப்பது போலவும் இருக்
கின்றது. இதுநிற்க இந்தக் கள்ள மரபினரோ சோழ அரசர்
களின் வம்சத்தவர்களாவர். ஏனெனில் இம்மரபினர்கட்குள்ள
பட்டப்பெயரில் சோழகர், சோழங்கத்தேவர், சோணாடுகொண்
டார், சோழங்கநாடார், சோழதரயர் என்னும் பட்டப்பெயர்கள்
இருக்கின்றன. அன்றியும் சோழகர் முதலிய பட்டப்பெயர்க
ளுள்ள கள்ளர் நாடுகளில் சோழகர் என்னும் பட்டப் பெய
ருள்ளவர்க்கு முதல் மரியாதை ஆலயங்களிலும் மற்றும் விசே
ஷங்களிலும் செய்துவருகிறார்கள். சோழ அரசர்களை கலிங்கத்
துப் பரணியில் சூரியன் குமாரனாகிய மனுச்சக்கரவர்த்தியின்
வழித்தோன்றல் களாகக் கூறியுள்ளதாக திருவாளர் மு. சுவாமி
னாத மாதைராயர் அவர்கள் தாமியற்றிய கள்ளர் சரித்திரத்தில்
தெரிவித்துள்ளார்கள். இம்மரபினர்களின் பட்டப் பெயர்களோ
இவர்கள் அரசு நடாத்தியவர்களெனவும்,பராக்கிரமத்துடன் போர்
புரிந்தவர்களெனவும் பெரும்பாலும் தெரிவிக்கின்றன. இது சுருக்
க உரையாகையால் சிறிது எடுத்துக் கூறலானேன். சேதிராயர்,
மாதைராயர், அங்கராயர், கலிங்கராயர், மழவைராயர், கொச்சி
ராயர், கொடும்பைராயர், தஞ்சைராயர், வல்லத்தரசு, நாட்டரசு
முதலிய பட்டப்பெயர்களால் இம்மரபினர்கள் க்ஷத்திரியர்களென
வும் பெரும்பாலும் பேரரசர்களாகவோ சிற்றரசர்களாகவோ செல்
வாக்குடன் வாழ்ந்துவந்தனர்கள் என்பது செவ்விதிலுணரப்
பாலது. மேலும் சங்கநூல்கள் அகநானூற்றிலும் புறநானூற்

தீலும் கள்வர் கோமான் புல்லி என்றிருப்பதாகத்தெரிகிறது. புல்லி என்னும் அரசன் சோழ அரசன் என்பதாய் திருவேங் கடத்தெல்லே காணப்படுவதில் நிச்சயமாகிறது. கல்லர் என்னும் பதம் ஏட்டுப்பிரதியிற் கள்ளராக எழுதப்பட்டு அச்சுக்கு வந்த காலத்து ள எழுத்து, அதின் இன மெல்லெழுத்து வ ஆக மாறியவா யிருக்குமோ நாமறியோம். மற்ருருகல் வெட்டு செந்தலையிலுள்ளதிலும் தஞ்சைக்கோன் வல்லக்கோன் கள்வ (ள)ர் கள்வ (ள) ன் செம்பிடுகுமுத்தரயர்..........என்பதாகக் காணப்படுகின்றதுக்கும் இதுவே சமாதானம் கூறத்துணிகின் றேன். அச்சுப்பிசகுகள் இருப்பது போல கல் வெட்டுக்களில் இருக்கவும் அமையும். எழுத்து சுத்தமாய் வெட்டுவது ஒன்று, எழுத்துப் பிசகற வெட்டுவது மற்ருென்று, இப்பொழுதும் அச்செழுத்துக்கோக்கிறவர்கள் (Compositors) இலக்கண ஞானக் குறைவினுல் அர்த்தப் பிசகுண்டாகும்படி அத்துணை தவறுசெய் து மேல்பார்ப்பவர்களின் சிரத்தைக்குறைவினுல் நூலியற்றியுவர்க் கு மாறுபட அருத்தமாகக்கூடினவாய் புது அச்சுநூல்களிற் பார்க்கிறோம். மேலும் நமது சங்கத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவிழாவின்கண் காலஞ்சென்ற தஞ்சை இலக்கண உபாத்தியா யர் சோமசுந்தரம் பிள்ளை அவர்களின் வம்சத்தினராகிய வக்கீல் திருவாளர் நடேசபிள்ளை அவர்கள். ஸ்ரீ திருஞானசம்பந்தசுவாமி கள் திருவாய் மலர்ந்தருளிய முதற்பாசுரத்தில் உள்ளம் கவர் கள் வன் என்பதாய் எமது சிவபெருமானைப் புகழ்ந்து பாடியிருப்ப தைக்கொண்டு கள்வர் என்னும் மரபினர்கள் உயர்குலமக்கள் எனக் கூறிப்போந்தனர். ஆனுல் அந்த இடத்தில் கள்வன் என்பது திரு டனேயே குறித்துக்காட்டுகின்றது. ஏனெனில் ஸ்ரீசம்பந்தசுவாமி கள் தன்னுடைய உள்ளத்தை அறவே சிவபெருமான் கவர்ந்து கொண்டதாகக் கூறியுள்ளார். அதாவது தற்போதத்தைத் தான் இழக்கும்படிசெய்து தன்னை (சீவன்) தன்மயம் (சிவமயம்) ஆக்கி னர் எனப் பொருள்படுகிறது. மேலும் கள்ளமரபினர்கள் யுத்த வீரர்கள் என்பதற்கும் அவர்கள் பட்டப்பெயரில் யுத்தமுண்டார் (உத்தமுண்டார்) யுத்தப்பிரியர் (எத்திப்பளாயர்) சேனுபதி (சே னதி), சண்டைப்பிரியர் (சேண்டப்பிரியர்) ளத்துவென்ருர்

(களத்துண்டார்) களமுடையார் (கிளாமுடையார்) கொற்றப்பிரியர் (கொத்தப்பரார்) முதலிய பட்டப்பெயர்களும் இருங்களர், மல்லுகொண்டார், சேனைநாட்டார், வல்லுண்டார் எனவும், நாடு, நகரங்களை ஆண்டார்கள் என்பதற்கு சாட்சியமாக சென்னையாண்டார் (சென்னண்டார்) மயிலையாண்டார் (மயிலாண்டார்) உலகங்காத்தார் (உலங்கத்தார்) ஈழங்கொண்டார் (ஈங்கொண்டார்) கண்டியராயர் (கண்டியர்) வண்டையரயர் (வாண்டையார்) பன்றிகொண்டார் (பண்ணிகொண்டார்; பன்றி ஓர் நாடு) எனவும் பட்டப்பெயர்கள் மிக்கவுள்ளன, விரிவஞ்சி விடுத்தாம். ஆகவே இத்துணைவீர பராக்கிரமமுள்ளவரும் அரசு செலுத்தியவரும் ஆகிய சோழ அரசரின் வம்சத்தவரை திருடர் என்று பொருள்படக்கூடியதாக கள்ளர் மரபினர் தமக்குக் குலப்பெயரிட்டுக்கொள்ளுவதற்கு ஒருபோதும் துணியவே மாட்டார்கள். மேலும் பாண்டிய அரசர்களை கைதவர் என்று அழைக்கப்பட்டிருப்பதை திருவிளையாடற் புராணத்திற் பல இடங்களிற் பார்த்துள்ளோம், கைதவர் என்னு பதத்துக்கு வஞ்சகர் என்று பொருள்படுகிறதுமுண்டு.

இந்த அர்த்தத்தில் பாண்டிய அரசர்கள் ஒருபோதும் தமது வம்சத்திற்கு இழிவுகூற நினைக்கமாட்டார்கள், ஆனால் இதற்கு அருத்தம் கைவந்த தவத்தையுடையவர்கள் என்று பொருள்படுத்துவது நியாயமாயிருக்கிறது. ஏனெனில் அவர்கள் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுரரிடம் மிகுந்த பக்தியுள்ளவர்களாகையால் கைதவர் என்று பரஞ்சோதி முனிவர் அவர்களால் கூறியுள்ளன. இதற்குச் சாட்சியமாக கொன்றைவேந்தன் என்னும் ஔவையாரால் கூறப்பட்ட புத்தகத்தில், "தெய்வஞ்சீறிற் கைதவமாளும்" என்னும் ஈரடிக்குறட்செய்யுளைக் காண்கிறோம். அதற்கு "கடவுள் கோபிப்பாரேயாகில் ஒருவன்செய்த தவம் நாசமடையும்" என்று அருத்தம் கூறப்பட்டிருப்பதை நாம் பள்ளிச்சிறுவர்களாயிருக்கும் காலத்துப் படித்துள்ளோம். கள்ளர்-கரியோன் எனத் திவாகரத்திற் கூறியிருப்பதை கருநிறமுடையவர்களாகையால் கள்ளர் எனக் கூறுகிறார்கள், எல்லாக் கள்ளமரபினர்களும் கறுப்பு நிறமுடையவர்கள் அல்லவென்பது கண்கூடாக நாம் பார்க்கிறோம். கரியோ

ன் என்னும் பதத்தை கருநிறமுடைய திருமாலுக்கும் தேவேந்திரற்கும் பொருள்கூறி காப்பு, இரட்சித்தல், தொழிற்களில் அத்துணை மேம்பாடுடையவர்கள் கள்ளர் மரபினர்கள் எனக் கூறுவாருமுளர். பிங்கலந்தையில் "சுடகரிப்பெயரும், கருநிறமகனும், கர்க்கடகராசியும் ஞெண்டும் கள்வன்" எனக்கூறப்பட்டிருப்பதில் கடைசியாக ஞெண்டு என்னும் ஜெந்துவானது மண்ணைத் தோண்டுவதுபோல பகைவர்களைத் தோண்டுகிறவர்கள் எனப்பொருள் கூறுகிறார்கள். மேலும் களர் நிலத்திற் பிறந்தார் கள்ளர் எனவும் பொருள் கூறுகிறார்கள். களர் நிலம் மேன்மைப்பட்ட நிலமல்லவாகையாலும் அதிற் பிறந்தாரும் அவ்விதமே யிருக்கக்கூடுமாகையாலும் வீர பராக்கிரமுள்ள இந்தச்சாதியினரை அதின் காரணமாகப் பெயரமைந்தது எனக் கூறுவதும் சிறிதேனும் பொருத்தமல்ல. களமர் (உழவுத்தொழில் செய்வோர்) என்பது கள்ளர் எனவாயிற்று எனக்கூறுவதும் தகுதியல்ல. ஏனெனில் இவர்களின் முன்னோர்கள் போர் உழவு செய்தவர்களே தவிரப் பிற்பட்டு வேற்றரசர்களால் தமது அரசுரிமை குலைந்தகாலத்து வீரம் சிறிதும் வேண்டுதல் இல்லாத உழவுத்தொழிலை காராளர், வேளாளர் வகுப்பினரைப்போல ஆரம்பித்தனர்களெனத் தெரிகிறது. மேட்டுப்பாங்கென்னும் காடாரம்பக் கிராமங்களில் 5, 6, தலைமுறைகட்கு முன்னர் இத்தொழிலைச்செய்யஆரம்பித்தார்களென நமது மரபின் முதியோர்கள் சொல்லக்கேட்டிருக்கிறேன். அதின் உண்மையை விளக்குவதற்கு இது சிற்றுரையென அஞ்சி விடுத்தனன். இவ்வகுப்பினர்கள் திருட்டுத்தொழிலைச் செய்கிறார்களே எனச் சங்கிப்பார்கட்கும் விடைகூறுவது என்னெனில் எல்லா வகுப்பினருள்ளும் இந்தத் திருட்டுத்தொழில் இருப்பதை நாம் பார்க்கிறோம். போலீஸ் ரிகார்டுகளிலும் கிரிமினல் ரிகார்டுகளிலும் இதின் உண்மையைச் செவ்வனே உணரக்கூடும். இந்த மரபினர்கள் திருட்டுத்தொழிலை வறுமையளவிற் சிறு பகுதியும், தமது விரோதிகள் மீதுள்ள கோபத்தினால் செய்யப்பட்டன பெரும் பகுதியுமாகும். இம் மரபினர்செய்யும் திருட்டுக் குற்றத்தை போலீஸ் அதிகாரிகள் சிறிது சிரமப்பட்டு விசாரித்துணரின் எனது கூற்றின் உண்மை எளிதிற் புலப்படும். மேலும் இவர்கள்

அரச மரபினர்களாகையால் "உறுபொருளு முல்குபொருளும்தன் ஞென்னர்த், தெறுபொருளும் வேந்தன் பொருள்" என்று திருவள்ளுவ நாயனர் அரசர் பொருள் செயல் வகையென்னும் அதிகாரத்திற் கூறியவண்ணம் தமது பகைவர்களைச் செயித்து அவர்களிட மிருந்து கவர்ந்த பொருள் என்பது அருத்தமாகிறது. ஆகவே அந்தவழக்கம் இப்பொழுதும் அம்மரபினர்கட்குப் பொருந்தக் காண்கிரேம். தமிழ்பேசாத மற்றச்சாதியார்கள் சோழன் என்னும் மொழியிலுள்ள ழ எழுத்துக்குப் பதிலாக ர எழுத்தை உபயோகித்து சோரன்=திருடன் எனப் பொருள் படுத்தி திருடன்=கள்வன், கள்ளன் என்று சொல்ல ஏதுவுண்டானதாக திருவாளர் சிவக்கொழுந்துமுதலியார் அவர்கள் எழுதியுள்ளார்கள். உலகத்தில் ஆதிமொழிகளாகச் சொல்லப்படுகிறவை ஆரியமும் தமிழுமேயாகும்; மற்றப்பாஷைகள் பெரும்பாலும் அவைகளின் கிளைப்பாஷைகளே! ஆரிய எழுத்துக்களில் ழ சப்தமுள்ள எழுத்து இல்லையேனும் ள எழுத்து இருப்பதால் சோளன் என்று சொல்லுவதற்குப் பொருத்தமிருந்தே தீருகிறது. ஆங்கிலமொழியானது ஆரியபாஷையினின்றும் பிரிந்தலற்றீன், கிரீக், ஸாக்ஸன் முதலிய கிளைப்பாடைகளினின்றும் சேர்க்கப்பட்டிருக்கிற பாஷையென ஆங்கிலம் கற்றவர்கள் அறிவார்கள். அதில் ள் சத்தத்துக்கு எழுத்துகிடையாது. ல் சத்தம்தரக்கூடிய L (எல்) எழுத்தை இரண்டுதடவைசேர்த்து ள் சத்தத்துக்கு தமிழில் உபயோகிப்பார்களேனும் நமது சாதிப்பெயரின் அதிர்ஷ்டவசமாகவே இயற்கையில் ல்ல் சப்தமேயுண்டாகிறது. கள்ளன் என்று ஆங்கிலத்தில் சொல்லுவதற்கு கல்லன் (Kallan) என்ற தொனியே இயற்கையா யிருக்கின்றது. கல்+அன்=கல்லன் என்று ஆயிற்று. "தனிக்குறின் முன்ஞெற்றுயிர்வரின் இரட்டும்" என்னும் நன்னூற் சூத்திரப்படிக்கும், "உடன் மேலுயிர் வந்தொன்று வதியல்பே" என்னும் சூத்திரப்படிக்கும் கல்லன் எனவும், தன் அருத்தத்தில் வித்தியாசம் சிறிதும் இல்லாமல் இனவெழுத்தாக ல்ல என்னும் எழுத்துக்கள் ள்ள எனவும் திரிந்து கள்ளன் என்னும் மொழியாக வழக்கத்திலிருந்துவருகிறது.

2. இந்திரகுலம். தேவேந்திரன் அசுரர்களின் கொடுஞ்செயலுக் கஞ்சி சீகாழிக்குவந்து சிவபெருமானைத் தவஞ்செய்து தக்கபடை களை அவரிடம்பெறவேண்டி இந்திராணியுடன் வந்து தங்கிய காலத்து அவர்களிடம் உற்பவித்தவர்கள் நமது மரபினர்கள் என்றும் இந்திராணியாகிய பத்தினியாரின்றி தேவேந்திரனே ஓர்காலம் பூவுலகுக்குவந்ததாகவும் அப்போது ஒரு கன்னிகை யைமணந்து நமது மரபினர்கள் உற்பத்தியானூர்களெனவும் அதற்குச் சாட்சியாக பழைய நூல்களிருக்கிறதாகச் சொல்லு கிறார்கள். அதற்குப் புராணங்களும் சில கூறுகின்றார்கள். இந்திரன் கௌதம முனிவரின் பத்தினியைப் புணர்ந்தகாலத்து கள்ளர், மறவர், அகம்படியர் என்று மூன்று புத்திரர்கள் உற்பத்தி யானதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் இராமாயணத்தில் அகல்யை (கௌதமர்பத்தினி)யை தேவேந்திரன் சோரத்தனமாய்ப் புணர்ந்த தாகச் சொல்லப்பட்டிருக்கிறதேதவிர சந்ததியுண்டானதாக சிறி தேனும் சொல்லப்படவுமில்லை. மேலும் பஞ்சம சாதியாக சொல் லப்படுவர்களுள் பள்ளச்சாதியார்களும் தம்மை தேவேந்திரப்பள்ள ஞகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். சாசனமுதலிய பத்திரங்களிலு ம் அவ்விதமே எழுதுகிறார்கள். ஆதிதிராவிடர் என்று சொல்லிக் கொள்ளுகிற பறையர்களும் தாமும் அக்குலமே யெனக்கூறுகிறார் கள். தேவேந்திரன் திருவாரூர் ஸ்ரீ தியாகேசரைத் தரிசனம் செய்யவந்த காலத்து அம்மரபினனும் தேவேந்திரனுடைய யானை யில் வந்ததாகவும் யானையேறும் பெரும்பறையன் என்பதாகவும் மதிப்பாகத் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள். ஆகவே இக்காலத்தில் எக்குலமும் நற்குலமென பெருமைபாராட்டிச் சொல்லுகிறதும், பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அது சரியோ பிசகோ என ஆராய் வதற்கு மனம் செலுத்தாது யார் யாரையும் அவர்கள் மனப் போக்கின்படி சொல்லிக்கொள்ளுவதற்கு இடம் கொடுத்துவிட்ட படியால் எந்தக்குலத்தினரும் தங்கள் இஷ்டப்படிக்கு சொல்லு கிறார்களே தவிர உள்ளூற உணர்ந்து அமைவுறச் சொல்லுபவர் கள் மிக்கவும் குறைவாயிருந்துவருகிறார்கள். நமது மரபினராகிய திருவாளர் சுவாமிநாத மாதைராயர் அவர்கள் நமது மரபினர்கள் சரித்திரத்தில், இந்திரகுலம் என்பதற்குப் பொருத்தங்காட்டி எழுதி

யிருப்பதுவே எனது சிற்றறிவுக்கும் தகுதியாகப் புலப்படுகிறது. அது ஏன்னெனில், சோழ அரசர்களில் இராசேந்திரச் சோழன் அரசாண்ட பின்னர் அந்த அரசனின் பின்சந்ததியார்கள் தம்முடைய பெயருடன் இராசேந்திர என்னும் பெயரைச்சேர்த்துச் சொல்லிவந்திருக்கக்கூடும்; பிறகு சோழ அரசர்கள் வேற்றரசர்களால் செயிக்கப்பட்டு தமது இராச்சியங்கள் நிலைகுலைந்து வலி குன்றிய பிறகு இராச என்னும் பதத்தையும் சேர்த்து தங்கள் பெயரைக் கூறுங்காலத்து வேற்றரசர்களின் தண்டனை வருமென அஞ்சி ராசேந்திரகுலமெனக் கூறுவதை விடுத்து தங்களை இந்திர குலமெனச் சொல்லிவந்திருக்கக்கூடுமெனத் தெரிவிக்கிறார்கள். அதற்குச்சான்றாக நமது ஜில்லாவிலுள்ள சமீன்றார்கள் அக்காலத்துப் பேரசர்களாற் நமது முன்னோர்கட்குக் கொடுக்கப்பட்ட சிறப்புப் பெயர்களை இப்பொழுதும் தங்கள் பெயருடன் சேர்ந்துக் கையெழுத்திட்டு வருவதும் உண்மையேயாகும். விஜய, விஜய ரெகுநாத, சவ்வாஜி விஜயரெகுநாத என்னும் சிறப்புப் பெயர்களை நமது வம்சத்து சமீன்றார்கள் தங்கள் பெயர்கட்கு முந்திச் சேர்ந்துச்சொல்லியும் கையெழுத்துசெய்தும் வருகிறார்கள். சிங்கநாடார் என்று சொல்லப்படும் நமது மரபினர்களாகிய நாயக்கர் வம்சத்தில் சாவடி நாயக்கர்கள் அரசாற்றமது முன்னோர்க்குக் கொடுக்கப்பட்ட சிறப்புப்பெயரைத் தங்களின் பெயருக்கு முன்பு சேர்த்துச் சொல்லியும் கையெழுத்துசெய்தும் வருகிறார்கள். அரித்துவாரமங்கலத்தில் நமது மரபினர்களாகிய இராசாளிவம்சத்தில் கல்விச்சீமான், காலஞ்சென்ற கோபாலசாமி ரெகுநாத ராசாளியார் குடும்பத்தார்களும் அவர்களின் தாயாதிகளும் தமது பட்டப்பெயருக்கு முன்பு ரெகுநாத என்னும் சிறப்புப் பெயரையும் உபயோகித்துவருகிறார்கள். ஆகவே இந்திர குலம் என்று நமது மரபினர்களை அழைக்கப்பட்டுவருகிறது ராசேந்திரச்சோழ அரசனின் வம்சத்தார்களென்பதைக் குறிப்பிக்கிறது என்பது மிக்கவும் நியாயமாகவே யிருக்கிறது.

3. சமீன்றார், பாளையகாரர், பாளையப்பட்டு, இந்தப்பட்டங்கள் நமது மரபினர்களில் சிற்றரசர்களாயிருப்பவர்கட்கு வழங்கிவரு

கின்றன. சமீன்என்னும் பதத்துக்கு நிலம் என்று பொருள் படுகிறது. மலையாளபாஷையில் ஜெம்மி என்பது நிலம்என்று அருத்தமாகும். ஆகவே நிலமிக்குள்ளவர்கட்கு சமீன்தார் என்று பெயர் வழங்கிவருகிறது. பாளையம் என்பது சேனை எனப்பொருள் கூறப்படுகின்றது. சோழஅரசர்கள் தமது சுற்றத்தார்களில் பராக்கிரமமிக்குடையவர்களை தெரிந்தெடுத்தும் அவர்கட்கு பரந்தநிலத்தை ஆட்சியாகக்கொடுத்தும் பகையரசர்களால் தமக்கு சண்டை உபத்திரவம் நேருங்காலத்து தங்கட்கு பாளையத்துடன் வந்து உதவிசெய்யவும் பெரும்பாலும் தமது எல்லையில் பாது காப்புக்காக பரந்தநிலத்தைக்கொடுத்து அதற்கு நிலத்தீர்வைமிராசு தார்கட்குப்போலல்லாமல் சிறுபகுதிமட்டும் தங்கட்குக்கொடுத்து வரவும் தங்கள் ஆளுகைக்குக்கட்டுப்பட்டவர்கள் என்பது தோன்ற அவ்விதம் செய்துவந்தார்கள் எனவும் புலப்படுகிறது. நமது மரபினர்களில் சமீன்தாரராயுள்ளவர்கள் 18 பாளையப்பட்டு என்று நான்சிறுபிராயமாயிருக்கும் காலத்தில் சொல்லிக்கொள்ளு வதுவழக்கம். அவர்களிற்சிலர் காலவசத்தினுல் இப்பொழுது தமது நில உரிமையிற் பெரும்பாலும் குறைந்தவர்களாய் இருந்து வருகிறார்கள்.

4. அம்பலக்காரர் இந்த சிறப்புப் பெயரானது கள்ளமரபினர் களிற் சிலர்க்கு தங்கள்பட்டப்பெயர்களுடன் சேர்த்து உபயோகிக் கப்பட்டு வருகிறது. அதற்கு காரணம் அவர்களின் நீதித்திற மையும் அடக்கியாளும் வலிமையையும் பற்றிவழங்கி வருகிறது. அம்பலகாரர் என்னும் வார்த்தைக்கு சாதித்தலைவர் என்பதாய் பெயரகராதியில் பொருள்கூறியிருக்கிறது. ஆகவே நாட்டாண் மைக்காரராயும் வழக்குகளைப் பொதுவறநோக்கித் தீர்மானிக்கக் கூடியவர்களாயும் தமது ஆணையை மீறிநடக்கிறவர்களை ஒறுக்கும் திறனுடையவர்களாயும் இருப்பவர்கட்கே இந்தச்சிறப்புப்பெயர் அக்காலத்தில் இந்த மரபினர்களாலேயே கொடுக்கப்பட்டிருக் கிறது. மேலும் சிதம்பரத்தில் அம்பலத்தின்கண்ணே சகலர்க்கும் இனிது நடஞ்செய்யாநின்ற எமது சிவபெருமானுர்க்கும் அம்பல வர், அம்பலவாணர் என்று அடியார்களாற் போற்றப்படுவதும்

ஈண்டு கவனிக்கத்தக்கது. ஸ்ரீ இராமலிங்கசுவாமிகள் "எல்லார்க்கும்பொதுவில்நடமிடுகின்றசிவமே" என்று கூறியிருப்பதும் இதுவே! தமது மரபினர்கட்குள் ஏற்படும் வழக்குகளைப் பொதுவற நோக்கித் தீர்மானிப்பதால் அம்பலகாரர் என்னும் சிறப்புப்பெயர் கொடுபெட்டிருப்பது நீதியும் தகுதியுமாகும். அம்பலவர், அம்பலவாணர் என்னும் பதங்கள் சிவபெருமானைக்குறித்து நிற்பதால் அவைகளினின்றும் வேறுபடுத்தும் நோக்கமாகவே அம்பலகாரர் என்னும் பெயரிட்டழைத்திருக்கக்கூடும் என்பது யூகிக்க வேண்டியிருக்கிறது. இதுநிற்க அம்பலகாரர் என்னும் மற்றொரு சாதியார்களுடன் கள்ள மரபினர்களை இந்தப் பெயரின் காரணத்தைக் கொண்டு முரண்பட நினைப்பது முற்றும் தவறாகும். அந்தச் சாதியார்களில் செல்வமும் செல்வாக்கு மிக்குடையவர்களைமட்டிலும் அம்பலகாரர் என்று சொல்லுகிறார்களேதவிர மற்றும் சாமான்யமானவர்கள் அவர்களை அம்பலகாரப் பிள்ளையென்றே சொல்லிவருவது இன்றும் வழக்கமாகும். பிள்ளையென்னும் பதமே சுதந்தரக்குறைவுடையவர் என்னும் அருத்தத்தைத்தானே செனிக்கச்செய்வது வெளிப்படையாகும். மேற்சொல்லிய அம்பலகாரர் என்னும் சிறப்புப் பட்டப்பெயருடைய குடும்பத்தினர்கட்கே அரசுகாவல் அக்காலத்தில் அரசர்களால் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. அரசர்க்குக்காவலன் என்று பொருளிருப்பதும் தங்கட்குத்தெரிந்ததே! பகைவர்களால் மேற்கொள்ளப்படாமல் பாதுகாக்கவேண்டியதுடன் வலிமையுடையவர்கள் வலிகுறைந்தவர்களை அடக்கி உபத்திரவம் செய்யாமலும் துஷ்டமிருகங்கள் தீயவர்கள் முதலியவர்களால் இடுக்கண்நேராமற் காக்கவேண்டியதும் அரசரின் கடமையாகும். எல்லாவற்றையும் தாமே நேரில் பார்க்கநேராத அசந்தர்ப்பத்தை முன்னிட்டு சோழ அரசர்கள் அக்காலத்தில் தமது மரபினர்களில் அம்பலகாரராகிய குடும்பத்தார்கட்கு காவல் உரிமையைக்கொடுத்து அவர்கட்குக் காவல் கிராமங்களில் இறையிலிமான்யமாக நிலங்களையும் கொடுத்துப் போற்றி வந்திருக்கிறார்கள். அந்தந்த கிராமத்துக்குடிகளும் மேற்படியார்களின் காவற்றன்மைக்காக அவர்கட்குத் தான்யங்களும் ரொக்கத்துகைகளும் கொடுத்து அன்புவிசுவாசத்துடன் மரியாதை செய்து

வர்திருக்கிறார்கள். அம்பலகாரர்களும் தங்கள் காவற் கிராமங்களில் திருட்டு முதலியவைநேர்ந்தால் அதற்கு ஈடாக தங்கள் சொந்தத்தொகையை நஷ்டப்பட்டவர்கட்கும் கொடுத்துவந்திருக்கிறார்கள். இப்பால் ஆங்கிலேய அரசாட்சியில் தாங்களே போலீஸ் (காவல்) அதிகாரவர்க்கத்தினரை ஏற்படுத்தியதினின்றும் நம்மவர்களின் காவலைப் புறக்கணிக்க ஆரம்பித்துவிட்டார்கள். நமது மரபினர்களே திருட்டுத்தொழில் செய்கிறதும் அதற்குத்தூண்டுதல் செய்கிறதுமாயிருக்கிறார்களென்பது அவர்களின் நோக்கமாயிருந்துவருகிறது. நகரங்களில் நமது மரபினர்கள் மிக்ககுறைவாயிருந்தும் அந்த இடங்களிலும் திருட்டுமுதலிய தீயதொழில்களையெல்லாம் வெளியூரிலிருந்து இவர்கள் தூண்டுதலினாலே நடக்கிறதென்று நினைத்து இவர்கள்மேற் பழிதூற்றுவதும் பரிதபிக்கத்தக்கதே! உள்ளன் இல்லாமல் ஊர் அழியாது என்னும் பழமொழியாகும் அனுபவமொழியை இவர்கள் மறந்தார்கள்போலும்!

5. நாட்டார், நாடார் என்னும் பட்டப்பெயர் நமது மரபினர்களிற் சிலர்க்கு வழங்கி வருகிறதுண்டு. அதற்குக் காரணம் பின்வருமாறு:—சோழவரசரிற் கடைசியரசன் கோனேரிமேற்கொண்டான் தனது பகையரசரால் மேற்கொள்ளப்பட்டு தனது இராச்சியம் நிலைகுலைந்தபின்னர் நமது மரபினர்கள் இராசதானியைவிட்டு பலர்களும் காடு அரணாகவுடைய கிராமங்களைத் தேடிவந்து காராளர், வெள்ளாளராயுள்ள பழங்குடிகளைத் தமது வலிமையினால் துரத்தியும் சுற்றத்துக்கழகு சூழவிருத்தல் என்றபடி தமது பந்துக்களையும் சூழ்ந்துள்ள கிராமங்களிற் குடியேறச்செய்தும் பல கள்ள மரபினர் கண்மிக்குள்ள கிராமங்களைச் சேர்த்து ஒரு நாடாக ஏற்படுத்தியும் நீதியும் வலிமையுமிருந்தவர்கள் நாட்டாண்மைக்காரர், காரியக்காரர், அம்பலகாரர் என்னும் தலைமையை வகித்துமிருந்துவந்திருக்கிறார்கள். இப்பொழுதும் கள்ளக்கிராமங்களின் தொகுப்புக்கு நாடு என்று வழங்கிவருகிறது. இந்த நாடுகளிலுள்ள கள்ள மரபினர்கள் தமது காலவசத்தினாலோ அல்லது ஒருவர்க்கொருவர் மனத்தாபத்தினாலோ மேற்கண்ட நாடுகளைவிட்டு மற்றச் சாதியார்களுள்ள கிராமங்களில் சீவனத்தை முன்னிட்டு குடியேறினார்கள். ஏற்கனவேயிருந்த குடிமக்கள் இவர்கள் நாட்

டிலிருந்து வந்தபடியால் நாட்டார் என அழைத்திருக்கக்கூடுமாகையால் நமது மரபினர்கட்கு நாடார் என்னும் பட்டப்பெயர் ஏற்பட்டதாயிருக்கிறது. ஆனாலும் அக்காலத்துக் குடியேறிய நாட்டார்கள் தமது பட்டப்பெயரல்லாதவரும் நாட்டிலிருந்துவந்த மற்றப் பட்டப்பெயருள்ள நாட்டார்கள் மரபினில் பெண்கொடுக்கவும் வாங்கவும் இருந்தேயிருக்கிறார்கள் என்பதற்குச் சாட்சியமாக நாடார் குடும்பங்களில் தாயாதிகளும் உறவினர்களிருப்பதும் தாயாதிகள் வர்க்கத்தில் சம்பந்தம் வைத்துக்கொள்ளாததும், இற்றைக்கும் காணுகின்றோம்.

நமது மரபினர்கள் நமது அரசர்களை தெய்வமாக நினைத்து வந்தார்கள் என்பதற்கு அறிகுறியாக நமது மரபினர்களிற் சில குடும்பத்தார்கட்கு தேவர், விஜயதேவர், வல்லாளதேவர் என்னும் பட்டப்பெயர்களுள்ளன. தேவர் என்னும் பட்டப்பெயருள்ள ஒரு குடும்பத்தார் பரந்த நிலமுள்ள ஒரு பிரபலமிராசுதாராயும் விஜயதேவர் என்னும் பட்டப்பெயருள்ள ஒரு குடும்பத்தார் ஜமீன்தாராயிருந்து வருவதும் தங்கட்கு தெரிந்த விஷயமாகும். மற்றும் கள்ள மரபினர்கள் மேம்பாடுடையவர்களென்றும் அரச வம்சத்தினர்களெனவும் தோன்றத்தக்க சில நியாயங்கள் எடுத்துக் கூறி இவர்கள் சரித்திரத்தை முடிக்கக்கடப்பாடுடையவனாவேன். புதுக்கோட்டை அரசராயிருந்து வருபவர் நமது மரபினராயும் தொண்டைமான் வம்சத்தினராயும் இருந்து வருகிறார்கள். தோட்டிமுதல் தொண்டைமான்வரையில் என்னும் பழமொழி நீங்கள் அறிந்ததேயாகும். ஆகவே தோட்டியென்பது இழி தொழிலுள்ளவர்களையும் தொண்டைமான் என்பது உயர் தொழிலுள்ள உயர்குலமென்பதையும் உணர்த்துகிறதென்பது அறியக்கிடக்கின்றது. மேலும் நான் முன்பு எடுத்துக்கூறிய சமீன்களில் பாப்பானாடு, சிங்கவனம், மதுக்கூர், நெடுவாசல், கல்லாகோட்டை, கண்டர்கோட்டை, பாலவனம் முதலிய சமீன்தார்களும் நமது மரபினரேயாவர். பூண்டி வாண்டையார், உக்கடைத்தேவர், சாவடி நாயக்கர் முதலிய கனவான்களும் அம்பலகாரர், காரியக்காரர், நாட்டார் என்பவர்களும் நமது

மரபினரேயாவர். இவர்களிற் சிலர்கள் காலவசத்திணுலும் வினைக் கேட்டினுலும் தமது நிலஉரிமையிற் பெரும்பாகம் குறைவுற்றிருக் கிருர்கள். இம்மரபினர்கள் விவாககாலத்தில் அரசாணைவைக்கும் வழக்கம் இன்றைக்கும் வழங்கிவருகிறது. யானை, குதிரை, ஒட் டை முதலிய அரசசின்னங்கள் தமக்கிருந்து வந்ததற்கறிகுறியாக மண்ணினுல் மேற்கண்ட உருவத்தைச்செய்து மணமகன் மண மகள் வதுவைசூட்டும் இடத்துக்குமுன்னர் வைத்து வருகிருர்கள். மேலும் இம்மரபினர்கள் ஆரியர்களின் வழக்கத்தைப்போல கோத் திரம்பார்த்து மணம் முடிக்கிருர்கள். அவர்கள் ஒரே கோத்திரத் தில் விவாகம்செய்யாததுபோல கள்ளமரபினர்களும் ஒரே பட்டப் பெயருள்ள குடும்பத்தில் சம்பந்தம் செய்வதுமில்லை. ஸ்ரீ சிவபெ ருமானும் திருமாலின் அம்சமாகிய ஸ்ரீராமரும் தெய்வங்களாக நம்மாற் பூஜிக்கப்படுபவர்களாயினும் அவர்கள் லௌகிகத்தைமுன் னிட்டுத் திருக்கல்யாணம் செய்தகாலத்து ஸ்ரீமீனுட்சியம்மையை யும் திருசானகியையும் தமது இடங்கட்கு வரவழைத்து வதுவை சூட்டாமல் அவர்களின் பிதாக்களின் நகரத்துக்கேவந்து மணவினை முடித்திருக்கிருர்கள். இதுவன்றியும் அரிச்சந்திரன், நளன், தரு மன் முதலிய சக்கரவர்த்திகளும் அவ்விதமே சிற்றரசர்களாயுள்ள வர்களின் குமாரத்திகளை அவர்களிடம் சென்று மணஞ்சூட்டியு மிருக்கிருர்கள். அதுபோலவே நமது மரபினர்களிற் பெரும்பா லாரும் அவ்வரசர்களின் வழக்கத்தையே தழுவிவருகிருர்கள். இந் நிகழ்ச்சிகளெல்லாம் நமது குலத்தினர்கள் முற்காலத்து அரசு நடத்தியவர்களெனவும் சோழ வம்சத்தின் மரபினர்களெனவும் யாவரும் எளிதில் அறியக்கூடியதாயுள்ளன. மற்றும் இம்மரபினர் கள் தெய்வபக்தியுள்ளவர்களென்பதற்கு அறிகுறியாக பெரியபுரா ணத்திற்கூறியுள்ள நரசிங்கமுனையரையர், ஐயடிகள் காடவர்கோ ன், கூற்றுவர், கழற்சிங்கர், மெய்ப்பொருளார் முதலிய நாயன்மார் கள் நமது மரபின் சிற்றரசர்களேயாவர். மேலும் விஷ்ணுவின் அடியவரும் திருவாய்மொழிப் பிரபந்தங்களிற் சில இயற்றியவரு மான திருமங்கைமன்னன் என்னும் ஆழ்வாரும் நமது குலத்தவ ரேயாவர். ஆதலால் இத்தகைய மேம்பாடுடையவர்களும் முற்கா லத்து இமயமலைவரையில் தனது புலிக்கொடியைப் பொறித்து இங்

தியாமுழுவதுமல்லாமல் கடாரம், ஈழம், கண்டி முதலிய கடற்கப் புறமுள்ள இடங்களிலும் அரசுசெலுத்திய சோழ அரசர் வம்சத்தினர்களாகிய கள்ள சாதியார்களைக் களவு செய்யும் சாதியினர் எனக்கருதுவதும் அவர்கட்குக் குரூரமான சட்டதிட்டங்களை ஏற்படுத்தவேண்டுமென நினைப்பதும் மிக்கவுந் தவறாகும். தஞ்சை ஜில்லாவிலுள்ள நமது கள்ள மரபினர்கட்கு தீயதொழில்செய்யும் சாதியினர்க்கு ஏற்படுத்தக்கூடிய சட்டங்கள் உபயோகத்துக்குக் கொண்டுவரக்கூடாதென காருண்ய சென்னை அரசாங்கத்தினர் கருணைகூர்ந்து உத்திரவு செய்திருக்கிறதைப்பற்றி நமது மரபினர் மனதார்ந்த விசுவாசத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடப்பாடுடையோம் என்பதையுந்தெரிவித்து இந்தவியாசத்தை முடிக்கலானேன்.

## கள்ள மரபினர்கட்கோர் வேண்டுகோள்.

நமது அரசாங்கத்தார் தற்காலத்தில் எந்த வகுப்பினரும் சம அந்தஸ்தை உடையவர்களேயாவர் என்பதைக்கருதி ஒரு சாதியார் மற்றொரு வலிமையுள்ள வகுப்பினர்களால் அடக்கப்படாவண்ணம் வேண்டிய சுதந்தரத்தைக் கொடுக்கும்பொருட்டு சட்டங்கள் ஏற்படுத்தியும் ராஜிகசம்பந்தமான எல்லாக்கட்சியினர்களும் அதற்கு அனுகூலமாகவே நம்மவர்கள் யாவரும் ஒற்றுமையுடன் மேல்நாட்டாரைப்போலும் ஜப்பானியர்களைப்போலும் முன்னேற்றமடைய வேண்டுமெனக்கருதி அதற்கனுகூலமுள்ள பிரசாரங்களைச் செய்தும் வருவதில் அதின்பயனாகக் கண்விழிப்புற்ற அநேக சாதியார்கள் தாழ்ந்தநிலைமையை உணர்ந்து முன்னேற்றமடையக் கருதி அவர்களும் ஒற்றுமைப்பட்டுக் கல்வியை விருத்திசெய்து உத்தியோக முறையிலும் வியாபாரம், கைத்தொழில், விவசாயமுதலியவைகளை அதிகப்படுத்தி நாளுக்குநாள் உயர்ந்த பதவிக்கு வந்துகொண்டிருப்பதைப் பார்த்திருந்தும் நாம் இனியும் கண்மூடித்தனமாயிருந்துகொண்டு பாட்டன், பூட்டன் இருந்த அந்தஸ்தைச் சொல்லிக்கொண்டும் காலம்வந்தால் எல்லாமேம்பாடும் அடையலா

குமென்று வீணே மனப்பால் குடித்துக்கொண்டும், ஒருவர் வாழ்ந்தால் அவன் பாட்டன் நிலைமையெனக்குத் தெரியாது எனப் பொருமை மேற்பட்டும் நமது அதிர்ஷ்டம், முயற்சியால் தெரியக் கூடும் என்பதை ஒரு சிறிதும் கருதாது நாளை நமனுக்கு ஒப்புவித்து நமது குழந்தைகள், "கொள்ளிக்கும் பட்டகடனுக்குமோ என்னைக் கொடுக்கவைத்துப், பள்ளிக்குவைத்தாரிலரோ பிதாவாகிய பஞ்சபாதகரோ" என்று விசனிக்கும் வண்ணம்செய்து, அறிவென்னும் வெளிச்சத்தைக் கல்வியாகிய தூண்டுகோலால் விளக்கமுறச்செய்யாது வீணே நாளைப்போக்குவது நலமாகுமோ!

நமது மரபினர்களின் பூர்வநிலைமையைப்பற்றி முன்னர் தெரிவித்தது நம்மை மற்றவகுப்பினர்கள் ஏளனமாய் நினைப்பது தவறென விளக்கினதுமாத்திரமல்லாமல் நாமும் முன்னிருந்த நிலைமைக்குவரவேண்டுமென்ற ஊக்கத்தை நமக்கும் உண்டாக்கவேண்டுமென்பதைக்கருதி அறிவு கொளுத்தவேண்டியதும் எனது நோக்கமாகும். நமது மரபினர்கள் பெரும்பாலும் இப்பொழுது விவசாயத்தொழிலையே கைக்கொண்டவர்களாயினும், "மேழிச்செல்வம் கோழைபடாது" என்னும் நீதிமொழியைச் சொல்லளவில் வைத்து, "உழவனைமிஞ்சிய ஊதியமில்லை, உழவனுங்கூடத்திரிவானுகில்" என்னும் அனுபவமொழியையும் மறந்து, வீட்டில் இருந்துகொண்டே விவசாயக் காரியத்தை முடித்துக்கொள்ளுகிருர்கள். "செல்லான்கிழவனிருப்பினிலம்புலந், தில்லாளினூடிவிடும்" என்னும் பொய்யாமொழியையும் மறந்தார்கள். அதினுலேயே வறுமை அடைந்தார்கள்! ஏனெனில் நமது மரபினர்களுள்ள கிராமங்களிலேயே கிருஷித்தொழில்செய்யும் நத்தமர் என்னும் உடையார்கள் தாமே தமது குடும்பத்தார்களுடன் விவசாயத்தைச்செய்து விருத்தியடைந்துவருகிறதை நாமே கண்ணாரப்பார்க்கிறோம். நமக்கு விவசாயம்போய் விவகாரம் மேலிட்டுள்ளது. நமது மரபினர் குடும்பங்களில் 100க்கு 10 குடும்பங்களாவது விவகார நடவடிக்கையில்லாதிருப்பார்களோவென்பது பெரிதும் ஐயப்பாடாகவேயிருக்கிறது! நமது முன்னோர்கள் அம்பலஞ்செலுத்திக் கிராமக்கட்டுப்பாடு, பஞ்சாயத்துமுதலியவற்றை ஏற்படுத்தி, நாடெங்கும் சமாதானத்தைப் பரவச்செய்து பொருள் விரய

மில்லாது மேம்படவாழ்ந்திருந்தார்கள் என்பதும் நாம் சிறு பிராயத்தில் முதியோர் சொல்லக்கேட்டிருக்கிறோம்.

இப்பொழுதோ ஒருகுடும்பத்தின் மக்கள் ஒத்திருக்கக்காண்கிலோம். மேலும் தீய ஒழுக்கமெனும் மதுபானத்தை நம்மிற்பலர் கைக்கொள்ளுவதினாலேயே பெரும்பாலும் திருட்டு முதலிய கெட்டசெய்கைகள் ஏற்படுவதற்கு ஏதுவாயிருந்துவருகிறது. முன்னர்நாம் கீழ்மக்களாக நினைத்தவர்களெல்லாம் அப்பழக்கத்தைபறவே பொழித்து முன்னேற்றம் அடைந்துவர அன்னோர்களின் பழக்கத்தை நாம்கையாளவது என்னதருமமோ, தெரியகில்லேன்! நமது பெண்மக்கள் தினசரி வீட்டு அலுவல் குறைந்தகாலத்து மஹாத்மாகாந்தியடிகள் தெரிவித்திருப்பதுபோல் நூல் நூற்றுதல், நெசவு முதலியவேலைகளிற் பழகும்படி செய்தால் அவர்கள் அயலார் வீட்டுச்சண்டைச்சச்சரவுக்கு தாங்கள் இடங்கொடுத்துக்கொள்ளாமலும் மனதைக்கெட்ட வழியிற்செல்லவிடாமலும் நமது குடும்பங்கட்கு சிறு ஆதாயமும் உண்டுபண்ணக்கூடியதுடன் அவர்களையும் சிக்கனமுள்ள சீவனத்தை நடத்தும்வகையிற் பழக்கியவர்களும் ஆவோம். இப்பொழுது கிராமங்களிற் பஞ்சாயுத்துப் பள்ளிக்கூடங்களும் விருத்தியடைந்து வருகிறதால் நமது சிறுவர்களையும் சிறுமிகளையும் பாடசாலைகட்குப் போகும்படிசெய்து விவசாயத்துக்குக முள்ளபடிப்புகளையும் கணக்குகளையும் சிறுவர்கட்கு கற்றுக்கொடுக்கும் படியும் சிறுமிகட்கு மனைத்தொழிலுக் குபயோகமுள்ள படிப்புகளையும் கணக்குகளையும் போதிக்கும்படியும் செய்வதற்கு நாம் அவர்களைத் தூண்டிவிப்பது மிக்க அவசியமாகும். மேலும் பயிர்த்தொழில் உள்ள நமது கிராமங்களின் பாடசாலைகளில் விவசாயம், கைத்தொழில், சிக்கனம், சுகாதாரம் இவைகளைப் போதிக்கும்படி செய்வதற்கு அரசாங்கத்தாரை நாம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள வேண்டியதும் நமது கடமையாகும்.

நாம் விவாகமுதலிய சுபகாரியங்களிலும் சரியே மற்றும் உத்தரகிரியை, ஸ்ரார்த்த முதலிய அசுபகாரியங்களிலும் சரியே அவசியமில்லாத செலவுகளைச்செய்து பெருங் கடனாளியாகிறது

பிக்கவும் விசனிக்கத்தக்கதே! இதுவுமல்லாமல் சுபகாரியங்களில் வரதட்சணை, வது தட்சணைகளிலும் ருதுசாந்தி, சீமந்த முதலிய நற் காரியகளிலும் அனுவசியமாகவே செலவிடுகிறோம். உணவு அளிப்பதுமட்டும் சத்காரியமேதவிர மற்றவைகளெல்லாம் வீண் ஆடம்பரமேயாகும். எல்லாத்தானங்களிலும் நிதானம் என்னும் தானமே பெரிதென ஏண்டு நான் வற்புறுத்தித் தங்கட்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இனி நமது கள்ளர் மகாசங்கத்தின் சம்பந்தமாய் சிறிது கூறி எனது பேரவாவை முடித்துக் கொள்ளுகிறேன். நமது சங்கமெனும் குழவிக்கு ஆறாண்டு நிறைந்தது. சிசுப்பருவம் தாண்டியுள்ளதேனும் நமது மரபினர்களின் அபிமானக்குறைவினால் சிசுப்பருவம் தாண்டாத குழந்தையாயிருக்கிறதெனவே சொல்லவேண்டியிருக்கிறது. மூலதனத்தால் நிறைய வளர்ச்சியடையாத காரணத்தால் இன்னும் பால் வேட்கை மாறவில்லை. எந்த வகுப்பினரேனும் முன்னேற்றமடைய வேண்டுமேயானால் ஒற்றுமையும் பொருட் சேர்க்கையாகிய மூலதனமும் விருத்தியடையவேண்டும். அஃதின்றேல் சொல்லளவில் நிற்குமேதவிரப் பயன் ஒன்றும் தராது. இந்த ஜில்லாவில் நமது மரபினர்களின் சங்கியை அதிகமாயிருந்தும் பிரதி ஆண்டுக்கும் ஒவ்வொரு குடும்பத்தாரும் ஒரு ரூபாய் சந்தா செலுத்தி நமது சங்கத்தினராக முன்வராதிருக்குங் குறையை என்னென்றெடுத்துரைப்பேன்! நமது சங்கம் ஸ்தாபித்த சிறிது காலத்தில் நமது மரபினர்களைத் திருட்டுச்சாதியார் என்பதாகக்கொண்டு மேற்படி தொழிலுள்ள சாதியார் வகுப்பிற்சேர்க்கவும் கைரேகையெடுக்கவும் இராத்திரி காலத்தில் கிராமங்கட்கு சுமார் 4, 5 மைல் தூரமிருக்கக்கூடிய போலிஸ் ஸ்டேஷனுக்குப் போய் ஆஜர் கொடுக்கவுமாகிய நிர்ப்பந்தஞ் செய்யக்கூடிய கொடிய சட்டத்தை அமுலுக்கு கொண்டு வரும்படி அரசாங்கத்தார்கள் முயற்சி யெடுத்த காலத்தில் நமது பெருந்தலைவர்களுடைய அரிய முயற்சியால் தடைப்படுத்தப் பட்டும் சென்ற வருஷத்தில் நமது ஜில்லாவில் அமுலுக்குக் கொண்டு வரவேண்டியதில்லை யென்று நமது காருண்யகவர்ன்மெண்டார் அவர்கள் உத்திரவு பிறப்புவித்து மிருக்கிறார்கள்.

நமது மரபினர்கட்குக் கல்வியேற்பட்டாலொழிய முன்னேற்ற மடையார்களென்பதை கருதி நமது சங்கத்தின் தலைவராகிய கனம் பாப்பாகுடி ஜமீன்தார் அவர்களின் செல்வக்குமாரரும் அப்பொழுது காரியதரிசிகள் உத்தியோகத்தை வகுத்தவர்களில் ஒருவருமாகிய திருவாளர் P. S. இராஜப்பாதுரை அவர்கள் கவர்ண்மெண்டுக்கு ஒருதிட்டம் ஏற்படுத்தித் தெரிவித்ததின்பேரில் அரசாங்கத்தார்களும் கருணைகூர்ந்து நமதுகிராமங்களில் பஞ்சாயத்து ஏற்படுத்தியும் பாடசாலைகள் நியமித்தும் ஐக்கியநாணயச்சங்கங்கள் மூலமாய்ப் பொருளுதவி செய்து நம் மரபினர்கட்குத்தாழ்ந்த வட்டிக்குக் கொடுத்தும் தவணையின் பேரில்சிறு பகுதியாகத் திருப்பிக் கொடுக்கும்படிக்கும் சுத்தமுள்ள குடிஜலங்கள் இல்லாத இடங்களிற் கிணறுகள் வெட்டிக்கொடுத்தும் இனியும் நமது மரபினர்களுக்கு சாகுபடி காலத்திலும், கிஸ்தி செலுத்தும் காலத்திலும் உயர்ந்தவட்டிக்கு வாங்கிப் பெருங் கடன்காரர்களாகா வண்ணம் go down (தான்யக்களஞ்சியங்கள்) ஏற்படுத்தி அவைகளில் தான்யங்களை ஈடுவைத்து தொகைபெற்று தான்யம் உயர்ந்த விலைக்கு விற்கும்சமயத்தில் விற்றுக்கடனை அடைக்கும் பொருட்டு வேண்டிய சாதகமும் கைத்தொழில் சம்பந்தமாய் நெசவுமுதலிய வேலைகளைக் கற்றுக்கொடுக்க தனிப்பாடசாலைகள் வைக்கவும் முயற்சிக்கமுன் வந்திருப்பதும் இந்தகள்ளர் மகாசங்கத்தின் மூலமாய்க்கிடைத்தபெரும் பயன்என்று உணராதார்யார்? ஆகவே இனியேனும் நமது மரபினர்கள் உற்சாகத்துடன் எழுந்து நமது சங்கத்துக்கு மூலதனத்தை சந்தாமூலமாய்ப் பிரதி வருஷமும் விருத்திசெய்யவும் நமது வாலிபர்கள் அப்போதைக் கப்போது தங்கட்கு ஓய்வுகாலம் கிடைக்கும் சமயத்தில் சாதித்தொண்டு புரிந்து கல்வி ஞானமில்லாதவர்கட்கு சன்மார்க்கத்தை யூட்டவும் நம்மிற் பெருங்கனவான்கள் பொருளுதவி புரிவதுடன் மேலானவர்களிடம் வாக்குகளி புரிந்து முன்னேற்ற மடையும்படி செய்யவும் கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்விதம் முயற்சியெடுக்கும் பட்சத்தில் மூலதனம் மிக்கவும் விருத்தியடைந்து நம்மே நடக்குச் சாதகமாயுள்ள அநேக நன்மைபயக்கும் காரியங்களை எளிதாய்ச் செய்து சித்தியடையவும்கூடும். அரசாங்கத்தார்களும் அச்சமயம்

நமது ஒற்றுமைப் பலத்தையும் சீர்திருத்தத்தையும் செவ்வனே தெரிந்து நமக்குப் பொருளுதவிபுரியவும் முன்னேற்றத்துக் கனுகூலமுள்ள விஷயங்களை நமக்கு வலியக்கொடுக்கவும் சந்தோஷத்துடன் முன்வருவார்கள் "எத்தால்வாழலாம் ஒத்தால்வாழ்லாம்" என்பது யாவர்க்கும் தெரிந்த உண்மையாகும்; இதைவிட்டு நமக்கு சர்க்கார்மூலமாக உதவி செய்யவந்திருக்கும் உத்தியோகஸ்தர்களிடம் உண்மையைச் சரிவரவெளியிடாமல் அவர்களைக்குறைகூறுவதற்குச் சிறிதும் நியாயமில்லை நாம் சன்மார்க்கததில் ஒற்றுமையுடையவர்களாகில் நமக்கு எல்லா சித்தியும் கைகூடும, சிறு எறும்பின் சுறுசுறுப்புக்கூட இல்லாமல் சோம்பித்திரிந்தோம் அதிலும் சோமபர் என்பவர் தேம்பித்திரிவர் என்பதாய்முடியும். ஆகையால் நமது மரபினர்கட் கினியேனும் ஊக்கத்தை ஊட்டுவித்து. ஒற்றுமையையும் தினேதினேவளர்ப்பித்து கல்வியிலும் செலவததிலும் முன்னேற்றமடைந்து அரச மரபினர்கட்குள்ள உணர்ச்சியையும் வலியுறுத்தி மேம்பாடடையும்படித திருவருள் பாலிக்க, எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றனன்.

வாழி நஞ்சோழ வம்சத்தார் வாழியே
வாழி நம்மிந்த்ர குலத்தினர் வாழியே
வாழி நங்கள்ள மரபினர் வாழியே
வாழி நம்ஜார்ஜு மன்னரும் வாழியே.

ஓம் சுபம்.